
باللغة التاميلية

جمعية إحياء التراث الإسلامي

هداية HIPC Hedaya Islam Presentation Center مركز الهداية للتعريف بالإسلام

صفة العمـرة بالصور

# உம்ரா செய்முறை படத்துடன்










வெளியீடு:

## مركز الهداية للتعريف بالإسلام

ஹிதாயா இஸ்லாம் பிரசன்டேசன் சென்டர்

[محافظتي الأحمدي ومبارك الكبير]

69980667 hedaya kwt hipckuwait hipc.kuwait hipc.alturath.net

صفة العمرة بالصور

ترجمة إلى اللغة التاميلية:

الشيخ/ أبوسعيد زندا (داعية المركز)

# உம்ரா செய்முறை படத்துடன்

மொழிபெயர்ப்பாளர் :

அஷ்ஷேய்க் அபூ ஸயீத் ஸின்தா

இஸ்லாமிய அழைப்பாளர், லஜ்னா

வெளியீடு:

ஹிதாயா இஸ்லாம் பிரசன்டேசன் சென்டர்

HEDAYA ISLAM PRESENTATION CENTER

Kuwait : 69980667 - 66559553

# பொருளடக்கம்

மர்கஸின் ஓர் அறிமுகம் ---------------------------------------------------- 03
பயணத்தின் போது ஓதவேண்டிய துஆ மற்றும் திக்ருகள் -- 04
உம்ரா ஏன் கடமையானது ------------------------------------------- 07
உம்ராவின் நேரம் ---------------------------------------------------- 07
உம்ராவின் சட்டம் ---------------------------------------------------- 08
உம்ராவின் விளக்கம் ------------------------------------------------ 08
உம்ராவின் செயல்கள் ---------------------------------------------- 08
இஹ்ராமுடைய எல்லைகள் ------------------------------------- 09
மீகாதில் செய்ய வேண்டியவைகள் -------------------------- 10
இஹ்ராம் ஆடை அணிந்தபிறகு செய்யவேண்டியவைகள் -- 15
இஹ்ராமில் தடை செய்யப்பட்டவைகள் ------------------- 17
உம்ரா செய்யக்கூடியவர் சில விசயங்களை செய்வது குற்றமல்ல ----------------------------------------------------------- 20
மீகாதிலிருந்து ஹரம்வரை செய்யவேண்டியவைகள் ----- 21
தவா∴பின் செயல்கள் ---------------------------------------------- 23
தவா∴ப் செய்து முடித்தபிறகு ---------------------------------- 26
ஸ∴பா மர்வாவிற்கு மத்தியில் ஸயீ செய்தல் ------------ 28
மொட்டையடித்தல் அல்லது முடி வெட்டுதல் ------------ 32

# மர்கஸ் ஓர் அறிமுகம்

பிஸமில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் அல்ஹம்துலில்லாஹ் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹ் வஅலா ஆலிஹி வஅஸ்ஹாபிஹி வமன்வாலஹூ . அம்மா பஃத்

இஹ்யாவுதுராதுல் இஸ்லாமியாவின் கீழ் இயங்கும் மர்கஸூல் ஹிதாயா தஃரீஃபுல் இஸ்லாம் அஹ்மதி மற்றும் முபாரகுல் கபீர் கவர்னட் உங்களுக்கு உம்ராவின் செய்முறை விளக்கம் படத்துடன் கூடிய இந்த புத்தகத்தை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது.

பல்வேறு மொழி பேசக்கூடிய சமுதாய மக்கள் பயனடையும் விதமாக பல்வேறு மொழிகளில் அல்லாஹ்வுடைய உதவியால் தொகுத்திருக்கிறோம்

உம்ரா பயணத்தின் நீண்ட கால பயணத்தின் அனுபவத்தின் அடிப்படையில் இந்த வேலையை நாங்கள் செய்திருக்கிறோம்

முஸ்லிம்கள் மற்றும் புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் இந்நூல் குர்ஆன் சுன்னா அடிப்படையில் உம்ராவின் செய்முறை படத்துடனும் மற்றும் நல்ல விளக்கங்களுடனும் தயாரிக்கப் பட்டுள்ளது.

உங்களுடைய இன்னும் எங்களுடைய நல்அமல்களை அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக ! இன்னும் தூய்மையான எண்ணத்தையும் செயல்களில் உறுதியையும் வழங்குவானக.

ஸல்லல்லாஹூ அலா ஸய்யிதினா நபிய்யினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

இப்படிக்கு
மர்கஸின் நிர்வாக சபை

# பயணத்தின் போது ஓதவேண்டிய துஆ மற்றும் திக்ருகள்

பயணம் சொல்லி விடை பெறுகின்றபோது கூறவேண்டியவை

أَسْتَوْدِعُ اللَّهَ دِينَكَ وَأَمَانَتَكَ وَخَوَاتِيمَ عَمَلِكَ

அஸ்தவ்திவுல்லாஹ தீனக வஅமானதக வகவாதிம அமலிக (நூல் : அபூதாவூது:2603)

வாகனத்தில் ஏறும்பொழுது அல்லது பயணம் புறப்படும்பொழுது

பிஸ்மில்லாஹ் என்று கூறவேண்டும் : بِسْمِ الله

(நூல் : அபூதாவூது:2604)

வாகனத்தில் ஏறிய பிறகு அல்லாஹு அக்பர் என மூன்று முறை கூறவேண்டும்

الله أكبر ، الله أكبر ، الله أكبر

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنقَلِبُونَ

பிறகு சுப்ஹானல்லதீ ஸக்கரலனா ஹாதா வமா குன்னா லகூ முக்ரினீன வஇன்னா இலா ரப்பினா ல முன்கலிபூன

اللَّهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِي سَفَرِنَا هَذَا الْبِرَّ وَالتَّقْوَى وَمِنْ الْعَمَلِ مَا تَرْضَى اللَّهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هَذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اللَّهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ وَالْخَلِيفَةُ فِي الْأَهْلِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ

அல்லாஹுஂ ம்ம இன்னீ அஸ்அலுக ஃபி ஸஃபரினா ஹாதல் பிர்ர வத்தக்வா வமினல் அமலி மாதர்ழா அல்லாஹுஂ ம்ம ஹவ்வின் அலைனா ஸஃபரனா ஹாதா வத்வி அன்னா புஃதஹுஂ அல்லாஹுஂ ம்ம அந்த ஸாஹிபு ஃபிஸ்ஸபர் வல் கலீபது ஃபில் அஹ்ல் அல்லாஹுஂ ம்ம இன்னீ அவூது பிக மின் வஃதாயிஸ் ஸபர் வகஆபதில் மன்லரி வஸூ யில் முன் கலபி ஃபில் மாலி வல் அஹ்லி. (நூல் : முஸ்லிம் : 3339)

(பொருள் :நாங்கள் இ(ந்த வாகனத்) தைக் கையாளும் திறன் பெற்றிராத நிலையில் எங்களுக்கு இதைப் பணியவைத்த (இறைவன்!) தூயவன் நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச்செல்லக்கூடியவர்களாய் உள்ளோம் இறைவா ! இப்பயணத்தில் நன்மையையும் இறையச்சத்தையும் நீ திருப்தி அடையக்கூடிய (நற்)செயல்களையும் உன்னிடம் வேண்டுகிறோம்.

இறைவா! இப்பயணத்தை எங்களுக்கு எளிதாக்குவாயாக! இப்பயணத்தின் தூரத்தை சுருக்குவாயாக! இறைவா ! நீயே என் பயணத்தின் தோழனாகவும் என் குடும்பத்தின் பிரதிநிதியாகவும் இருப்பாயாக! இறைவா ! இப்பயணத்தின் சிரமங்களிலிருந்தும் நிலை குலையச்செய்யும் துயரக்காட்சியிலிருந்தும் செல்வத்திலும் குடும்பத்திலும்

நிகழ்ந்துவிடும் தீய மாற்றங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்பு கோருகிறேன்.

لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ، سُبْحَانَكَ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ، فَاغْفِرْ لِي ، فَإِنَّهُ لا يَغْفِرُ الذُّنُوبَ إِلا أَنْتَ

லாயிலாஹ இல்லா அன்த ஸுப்ஹானக இன்னீ லலம்து நப்ஸி ஃபஃபிர்லி ஃபஇன்னஹு லா யஃபிரு துனூப இல்லா அன்த

உயரமான இடத்தில் ஏறும்போது கூறவேண்டும்

اللَّهُ أَكْبَرُ அல்லாஹு அக்பர்

பள்ளமான பகுதியில் இறங்கும் போது கூறவேண்டும்

سُبْحَانَ اللَّهِ ஸுப்ஹானல்லாஹ்

ஏதாவது ஒரு இடத்தில் இறங்கும் போது கூறவேண்டும்

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அவூது பி கலிமாதில்லாஹித்தாம்மதி மின் ஷர்ரி மாகலக்

பயணத்திலிருந்து திரும்பி வரும்போது மேற்கூறபட்ட துஆவையும் கூடுதலாக கீழ்காணும் துஆவையும் ஓத வேண்டும் (الله أكبر، الله أكبر،..... سُبْحَانَ الَّذِي..... الخ

பயணதிலிருந்து திரும்பும் போது

آيِبُونَ تَائِبُونَ، عَابِدُونَ لِرَبِّنَا حَامِدُونَ

ஆயிபூன தாயிபூன ஆபிதூனு லிரப்பினா ஹாமிதூன்

## உம்ரா ஏன் கடமையானது?

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள் (அல்குர்ஆன் 2:196)

ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களின் பரிகாரமாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜு க்கு, சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரி, முஸ்லிம்)

## உம்ராவின் நேரம்

மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த அடிப்படையில் உம்ராசெய்வதற்கான குறிப்பிட்ட நேரங்கள் குறிப்பிடவில்லை வருடம் முழுவதும் நிறைவேற்றலாம் என்றாலும் ரமழான் மாத உம்ராவிற்கென்று சிறப்புகள் உண்டு அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள் : ரமழானில் உம்ரா செய்வது என்னோடு ஹஜ் செய்வதற்கு சமம். (நூல் : புகாரி, முஸ்லிம்)

## உம்ராவின் சட்டம்

உம்ரா சுன்னத் என்று பெரும்பாலான அறிஞர்களும் சில அறிஞர்கள் ஒரு தடவை வாஜிப் என்றும் கூறுகிறார்கள். இது உலமாக்களுக்கு மத்தியிலுள்ள கருத்து வேறுபாடாகும்.

## உம்ராவின் விளக்கம்

க..பாவிற்கு சென்று க..பாவை வலம் வருவதாகும், ஸ..பா மர்வாவிற்கு மத்தியில் ஸயீ (தொங்கோட்டம்) செய்வதாகும்.

## உம்ராவின் செயல்கள்

1. இஹ்ராம் (நிய்யத் வைத்தல்)
2. தவா..ப் செய்தல்
3. ஸ..பா, மர்வாவிற்கு மத்தியில் தொங்கோட்டம் ஓடுதல்
4. முடியை களைதல் ( மொட்டை போடுதல் ) அல்லது முடியை குறைத்தல்

## இஹ்ராமுடைய எல்லைகள்

அது ஐந்து இடங்கள் அதை இஹ்ராம் அணியாமல் கடந்து செல்லக் கூடாது

1. துல்ஹுலைபா : மதீனாவாசிகளுக்கும் அதை கடந்து வருபவர்களுக்கு முள்ள எல்லையாகும் இது மதீனாவிற்கு அருகில் உள்ளது. இதற்கு (அப்யார் அலி) என்று கூறப்படும்.

2. அல்ஜஹ்பா : சிரியாவாசிகளுக்கும் அதை கடந்து வருபவர்களுக்கு முள்ள எல்லையாகும். இதற்கு ராபிக் என்று சொல்லப்படும்.

3. கர்னுல் மனாஸில் : நஜ்து வாசிகளுக்கும், அதை கடந்து வருபவர்களுக்கு முள்ள எல்லையாகும் இதற்கு ஸைலுல் கபீர் என்று சொல்லப்படும்.

4. யலம்லம் : யமன் வாசிகளுக்கும், இந்தியவாசிகளுக்கும் மேலும் அதை கடந்து வருபவர்களுக்கு முள்ள எல்லையாகும் இதற்கு ஸஃதிய்யா என்று சொல்லப்படும்.

5. தாது இர்க் : இது ஈராக் வாசிகளுக்கும், அதை கடந்து வருபவர்களுக்குமுள்ள எல்லையாகும்.

# மீகாதி (எல்லையி) ல் செய்யவேண்டியவைகள்




மீகாத்



மீகாத்

மீகாதி (எல்லையை) அடைந்ததும் பின் வருபனவற்றை செய்ய வேண்டும்

(இவைகளை மீக்காத்தை அடைவதற்கு முன்பாக பயணப்பாதையின் இடையிலோ அல்லதுவீட்டிலோ அல்லது இஹ்ராம் அணிவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பே செய்து கொள்ளலாம்)



1. நகம் வெட்டுதல் (1)
2. மீசையை கத்தரித்தல்



3. அக்குள் மற்றும் மர்மஸ்தானத்தின் முடி அகற்றுதல்
4. பல் துலக்குதல் (4)

5. குளித்தல்




இஹ்ராம் அணிவதற்கு முன்பாக ஆண்கள் தங்களது உடல் முழுவதும் குளிக்கவேண்டும் குளிக்கும்பொழுது (1) சோப்பு சாம்பு போன்றவைகளை உபயோகித்து உடலிலுள்ள நாற்றங்களை போக்கிக்கொள்ளவேண்டும்.







6. இவ்வாறே பெண்களும் குளித்துக்கொள்ளவேண்டும் மேலும் மாதவிடாய் அல்லது பிள்ளைப்பேறுக்கான இரத்தம் வந்து கொண்டிருந்தால் அவர்கள் சுத்தம் ஆகி குளிக்கின்றவரை தவாஃப் செய்யக்கூடாது (2) குளித்தபிறகு உடம்பு, தலை,தாடி போன்றவற்றிற்கு நறுமணத்தை இஹ்ராமில் நுழைவதற்கு முன்பு பூசிக்கொள்ளவேண்டும். (3) நறுமணத்தை இஹ்ராமுடைய ஆடையில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பெண்கள் குறைவாக மணமுள்ள நறுமணத்தை மேனியிலுள்ள வாடையை போக்குவதற்காக பூசிக்கொள்ளலாம். என்றாலும் கஃபாவில் ஆண்கள்

கலந்திருப்பதால் பெண்கள் நறுமணத்தை பயன்படுத்தாமல் இருப்பது சிறந்ததாகும்.

7. ஆண்கள் கீழாடை மற்றும் மேலாடையில் தையல் இல்லாமல் அணிய வேண்டும். (1) (2) இரண்டும் வெள்ளை நிறமாக இருப்பது விரும்பத்தக்க தாகும்.







ஒரு பெண் தன்னுடைய அழகை வெளியே காட்டாமல் எந்த ஆடை வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம் அதேபோல தையல் ஆடை அவர்களுக்கு தடையில்லை. (3) பெண் தனது முகத்தை நிகாபை கொண்டும் (4) கையுறை கொண்டு கையையும் மறைக்கக்கூடாது காரணம் நபி (ஸல்) அவர்கள் இஹ்ராம் அணிந்த பெண் தனது முகத்தையும் கையையும் மூட வேண்டாம் என கூறினார்கள்.







(நூல் : புகாரி, முஸ்லிம்)

என்றாலும் அந்நியர்கள் தங்களை

பார்ப்பார்கள் என்ற பித்னாவை பயந்தால் அவர்கள் தங்களது முகத்தை மூடிக்கொள்ளலாம் அவர்கள் இதற்காக தண்டப்பரிகாரம் கொடுக்கத்தேவையில்லை. காரணம் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இஹ்ராம் அணிந்த நிலையில் பயணித்தோம் அப்பொழுது வாகனக் கூட்டங்கள் எங்களை கடந்து செல்லும் அந்நேரத்தில் நாங்கள் எங்களது முகத்தை மறைத்துக் கொள்வோம் கடந்து சென்றபிறகு திறந்து கொள்வோம்.

(நூல் : அபூதாவூது-1835)

8. ஆண்கள் காலின் மேல் பாதம் திறந்திருக்கும்படி செருப்பு அணியவேண்டும். (1) (2)

காலை மூடிய செருப்பு (3) சாக்ஸ் (4) சூ, இவைகளை அணியக்கூடாது.













பெண்கள் சூ, சாக்ஸ், மற்றும் செருப்பு இவற்றில்

எதைவேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம்.

- ஆகுமான காரியங்களில் ஒன்றை விட்டுவிட்டாலோ அல்லது அதை செயல்படுத்தாமல் விட்டாலோ குற்றமில்லை இன்னும் அவருடைய உம்ரா கூடிவிடும்.

- ஆகுமாக்கப்பட்ட செயல்களை இஹ்ராம் அணிவதற்கு முன்போ அல்லது பின்போ இஹ்ராமுடைய நிய்யத்தில் நுழைந்து தல்பியா சொல்வதற்கு முன்செய்தால் குற்றமில்லை.


## உம்ரா செய்பவருக்கான அனுமதி :




1. கைகடிகாரம் அணிதல்
2. மோதிரம் அணிதல்
3. பெல்ட் அணிதல்
4. ஹெட் செட் அணிதல்







## இஹ்ராம் ஆடை அணிந்தபிறகு செய்யவேண்டிவைகள்

- இந்த காரியங்களை செய்து முடித்த பிறகு ஒழுச்செய்து விட்டு இஹ்ராம் ஆடையை அணிந்து கொள்ளவேண்டும் மேலும் தொழுகையின் நேரமாக இருந்தால் அந்த தொழுகையை நிறைவேற்றவேண்டும் இல்லையேல் ஒழுவிற்காக அல்லது பள்ளியின் காணிக்கை அல்லது ந:ஃபிலான தொழுகையை தொழுது கொள்ளவேண்டும். காரணம் நபி(ஸல்)அவர்கள் துல்குலை:ஃபாவில் இரண்டு ரகஅத் தொழுதார்கள் பிறகு வாகனத்தின் மீது ஏறி அமர்ந்து பின் வரும் நிய்யத்தை கூறினார்கள்
(நூல் : முஸ்லிம்:2871)

- தொழுது முடித்துவிட்டு இஹ்ராமிற்கான நிய்யத்தை மொழியவேண்டும் அதாவது லப்பைக் உம்ரதன்
(நூல் : முஸ்லிம் : 3054)

- மேலும் தல்பியா கூறவேண்டும்

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لَا شَرِيكَ لَكَ لَبَّيْكَ إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ
لَا شَرِيكَ لَكَ

லப்பைக் அல்லாஹு ம்ம லப்பைக், லப்பைக் லாஷரீக லக லப்பைக் இன்னல்ஹம்த வன்னி:ஃமத லக வல்முல்க லாஷரீக்க லக (நூல் : புகாரி, முஸ்லிம்)

இன்னும் வாகனத்தில் ஏறிய பிறகுதான் தல்பியாவை கூறவேண்டும் மாற்றமாக தொழுது முடித்ததும் கூறினால் குற்றமில்லை.

குறிப்பு :

உம்ரா செய்பவர் வாகனத்தில் பயணிப்பதற்கு முன்பு அல்லது பாதையிலோ அல்லது விமானத்திலோ இஹ்ராம் அணிந்து கொள்ளலாம் என்றாலும் நிய்யத்தை மீகாத் (எல்லை) வந்தடைந்தவுடன் தான் கூறவேண்டும். பஸ் அல்லது விமானம் எதில் உம்ராவிற்காக பயணம் செய்தாலும் நிய்யத் சொல்லிவிட்டு தல்பியாவை கூறவேண்டும். (விமானஓட்டி மீகாத் வந்தடைந்ததை அறிவிப்பு செய்வார்)

இன்னும் இஹ்ராமில் நுழைந்து தல்பியா கூற துவங்கிய உடன் இஹ்ராமில் தடை செய்யப்பட்டவைகளை தவிர்ந்து கொள்ளவேண்டும்.

# இஹ்ராமில் தடை செய்யப்பட்டவைகள்

(இஹ்ராம் அணிந்தவர் இஹ்ராமில் நுழைந்தவுடன் தவிர்ந்து கொள்ளவேண்டியவைகள்)

1. நகம் வெட்டுதல் (1)

2. உடல் மற்றும் தலையிலுள்ள முடிகளை அகற்றுதல் (ஆண் பெண் இருபாலருக்கும்) (2) (3)











3. ஆடை மற்றும் உடம்பில் நறுமணம் பூசுதல் (ஆண் பெண் இருபாலருக்கும்) (4)




4. மணமுடித்தல் இன்னும் தனக்கோ அல்லது மற்றவருக்கோ பெண் பேசுதல். (5)


5. உடலுறவு கொள்ளுதல் இன்னும் அதை நாடுதல்

6. தரை விலங்குகளை வேட்டையாடுதல் (1) (2)






• கடல் வாழ் பிராணிகளை வேட்டையாடுதல் கூடும் (3) அவ்வாறே நாட்டுக்கோழியும் கூடும் (4)






7. நிகாப் அணிவது போல முகத்தை மூடுதல்

8. தொப்பி, தலைப்பாகை, துண்டு போன்றவற்றைக் கொண்டு தலையோடு ஒட்டியதாக ஆண்கள் தங்களது தலையை மூடுதல். (5) (6) (7)








• வெயிலிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக குடை மற்றும் ஏதாவது பொருளைக் கொண்டு தலையை

மறைத்துக் கொள்ளுதல் ஆகுமானது (1) அல்லது தலைக்கு மேல் சுமைகளை சுமப்பது (2)










9. ஆண்கள் சட்டை, பேண்ட், சிர்வால் போன்ற தையல் ஆடைகளை அணியக் கூடாது (3)

10. சூ மற்றும் சாக்ஸ் காலை மூடிய செருப்புகளை ஆண்கள் அணியக்கூடாது. (4) (5)







## பெண்களுக்கான குறிப்புகள்:

- பெண் இஹ்ராமுடைய நிலையில் கையுறை மற்றும் முகத்திரையை அணியக்கூடாது

- அந்நிய ஆடவர்களைக் கண்டால் மூடிக்கொள்ளலாம்
- பெண்கள் தங்களது தலையை முழுமையாக மறைத்துக்கொள்ளலாம்

## உம்ரா செய்யக்கூடியவர் சில விசயங்களை செய்வது குற்றமல்ல

1. அழுக்காகி விட்டதற்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ இஹ்ராமுடைய ஆடையை கழற்றுவது கூடும் (1)




அவ்வாறே செருப்பை கழற்றுவதும் கூடும்

- அவ்வாறே பெண்களும் தங்களது ஆடைகளை கழற்றி வேறு ஆடை மாற்றுவது குற்றமில்லை.

2. இஹ்ராம் அணிந்தவர் குளிப்பதும் இன்னும் தலைமுடி விழாமல் தலையை கழுவுவதும் கூடும் என்றாலும் தலைமுடி விழும் படியான காரியங்களை செய்யாமலிருந்தால் குற்றமில்லை (2)






அல்லாஹ் அவன் தனித்தவன் இன்னும் தேவையற்றவன் அவனை யாரும் பெறவுமில்லை அவன் யாரலும் பெறப்படவும் இல்லை அவனுக்கு நிகராக யாருமில்லை

## மீகாதிலிருந்து ஹரம்வரை செய்யவேண்டியவைகள் ① ②


1


2

• இஹ்ராமில் நுழைந்துவிட்ட பிறகு பஸ் அல்லது விமானம் எதில் இருந்தாலும் தல்பியாவை அதிகப்படுத்தி கஃபாவை அடைகின்றவரை சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لاَ شَرِيكَ لَكَ لَبَّيْكَ إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لاَ شَرِيكَ لَكَ

லப்பைக் அல்லாஹூம்ம லப்பைக், லப்பைக் லாஷரீக்க லக லப்பைக்

இன்னல் ஹம்த வன்னிஃமத லக வல்முல்க லாஷரீக்க லக.

• முடிந்தவரை திக்ர் மற்றும் துஆக்களை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்


• ஆண்கள் தல்பியாவை சப்தமிட்டும் பெண்கள் சப்தமில்லாமலும் கூற வேண்டும்.

• மஸ்ஜிதுல் ஹராம் (கஃபாவை) அடைந்ததும்



வலது காலை உள்ளே வைத்து பின் வருமாறு கூறி நுழையவேண்டும்.

بسم الله، اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ
اللَّهُمَّ افتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِك



- பிறகு க:பாவை அடைந்ததும் தல்பியாவை விட்டுவிடவேண்டும்

- தவா:பை துவங்குவதற்கு முன்னால் ஒழு இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும் காரணம் ஒழு இல்லாமல் தவா:ப் செல்லாது (1)





- தவா:பை துவங்குவதற்கு முன்பாக தோல்புஜத்தை திறப்பதை மறந்து விடாதே அதாவது வலது தோல் புஜத்தின் பகுதியிலுள்ள மேலாடையை அக்குளின் வழியாக விட்டு இடது பாகத்தின் தோல் புஜத்தின்மீது போட்டுக்கொள்ளவேண்டும். இவ்வாறே ஏழு தவா:ப்களிலும் செய்வது சுன்னத்தாகும் (2)






ஷிர்க் என்பது வணக்க வழிபாடுகளில் ஒன்றை அல்லாஹ்அல்லாதவருக்கு கொடுப்பதாகும்

# தவா∴பின் செயல்கள்




• தவா∴பை ஹஜ்ருல் அஸ்வத் இருக்கும் இடத்திலிருந்து துவங்க வேண்டும், முடிந்தால் ஹஜருல் அஸ்வதில் இரு கைகளை வைத்து இரு கைகளுக்கு மத்தியில் வாயை வைத்து முத்தமிட்டுக் கொள்ளவேண்டும்.




அதை நேரடியாக முன்னோக்கி முத்தமிட்டுக் கொள்ள வேண்டும் (2)


இன்னும் ஹஜருல் அஸ்வதை நேரடியாக முத்தமிட முடியவில்லை யெனில் கையால் தொட்டோ அல்லது ஏதாவது ஒரு வகையில் தொட்டு முத்தமிட்டுக்கொள்ளவேண்டும் மேலும் (பிஸ்மில்லாஹி அல்லாஹ் அக்பர்) எனக் கூறவேண்டும். ( நூல் : புகாரி:1535)

• தொட இயலவில்லையெனில் ஹஜருல் அஸ்வத் கல்லிற்கு நேராக நின்று கொண்டு கையால் சைக்கினை

செய்து (1) (2) பிஸ்மில்லாஹி அல்லாஹ் அக்பர் எனக் கூறி துவங்க வேண்டும்.







• பிறகு க∴பாவை உனது இடது புறத்தில் ஆக்கி (3) நடந்து வரவேண்டும் ஒவ்வொரு சுற்றிலும் விரும்பிய துஆக்களை திக்ருகளை அல்லது குர்ஆன் வசனங்களை ஓதிக்கொள்ளலாம் தவா∴பிற்கென்று பிரத்தியேக துஆ கிடையாது.

• ருக்னுல் யமானை அடைந்ததும் முடிந்தால் அதை தொட்டுக் கொள்ளவேண்டும் முத்தமிடக்கூடாது இன்னும் சைக்கினை செய்வதோ தக்பீர் சொல்வதோ கூடாது. (4)




• தவா∴புடைய எந்த சுற்றுக்கும் ருக்னுல் யமானை அடையும் வரை பிரத்தியேகமான துஆக்கள் கிடையாது, இன்னும் ருக்னுல் யமானை அடைந்துவிட்டால் ருக்னுல் யமானிற்கும் ஹஜருல்

அஸ்வதிற்கும் மத்தியில் ரப்பனா ஆதினா ஃபித்துன்யா ஹஸனதன் வஃபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன்னார். ( நூல் : சுனன் அபூதாவூது:1894)

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّار

(எங்கள் இறைவனே!) எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக. மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக. இன்னும் எங்களை (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக! என ஒவ்வொரு சுற்றிலும் ஓத வேண்டும்.

ஹஜருல் அஸ்வதை அடைந்து விட்டால் ஒரு சுற்று நிறைவேறிவிடும் ஒவ்வொரு முறையும் முடிந்தால் கல்லை தொட்டோ அல்லது சைகை செய்தோ முந்தைய படத்தில் செய்தது போல செய்து (பக்கம் :23) அல்லாஹு அக்பர் எனக்கூறி துவங்க வேண்டும் ( நூல் : புகாரி:1535)


இவ்வாறே ஒவ்வொரு சுற்றுகளாக ஏழு முறை சுற்றி முடிக்க வேண்டும்.


ஆண்கள் முதல் மூன்று சுற்றுகளில் (ரம்லு) உடலை லேசாக குலுக்கி குலுக்கி ஓடவேண்டும்.

அதாவது தோல் புஜத்தை லேசாக குலுக்கியபடி செல்லவேண்டும் மீதமுள்ள நான்கு சுற்றுக்களை நடந்து சென்று முடிக்க வேண்டும் மேலும் கூட்டத்தின் காரணமாக ரம்லு செய்யமுடியவில்லையெனில் நடந்து செல்லவேண்டும்.

# ஏழு தவா∴ப் செய்து முடித்தபிறகு

- மேலாடையை இரண்டு தோல் புஜத்தின் மீது போட்டுக் கொள்ள வேண்டும் (1)




- பிறகு மகாமே இப்ராஹீம் (2) சென்று இதை ஓதிக் கொள்ள வேண்டும்

وَاتَّخِذُواْ مِن مَّقَامِ إِبْرَاهِيمَ مُصَلًّى

பிறகு முடிந்தால் மகாமே இப்ராஹீமுக்கு பின்னால் அல்லது மஸ்ஜிதில் ஹராமில் எந்த இடத்தில் வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கு தவா∴ பிற்காக இரண்டு ரகஅத்கள் (3) தொழுது கொள்ள வேண்டும்.




- பிறகு முதல் ரகஅத்தில் சூரதுல் ∴பாதிஹாவிற்குப்பிறகு சூரதுல் கா∴பிருன் (قل يأيها الكافرون) இரண்டாம் ரகஅத்தில் சூரதுல் ∴பாதிஹாவிற்குப்பிறகு குல் ஹூ வல்லாஹ் அஹது (قل هو الله احد) ஓதுவது விரும்பத்தக்கதாகும், இந்த சூரா தெரியவில்லையெனில் வேறு சூரா ஓதிக்கொள்ளலாம். (நூல் : முஸ்லிம் : 3009)



இறந்தவர்களிடம் தேவைகளை கேட்பது அல்லது உதவிதேடுவது அல்லது ஸஜ்தா செய்வது அனைத்தும் இணைவைப்பாகும்

• தொழுது முடித்த பிறகு முடிந்தால் ஹஜருல் அஸ்வத் சென்று மேலே செய்தவாறு செய்து கொள்ளவேண்டும் அதற்கு இயலவில்லை என்றால் விட்டு விடலாம்.

• பிறகு ஜம்ஜம் நீர் இருக்கும் இடம் சென்று ஜம்ஜம் நீரை வயிறு நிறைய குடிக்கவேண்டும (1)




நீரை குடிக்கும்போது மனதில் தனது தேவைகளை நினைத்துக் கொள்ளவேண்டும், மேலும் முடிந்தால் இந்த துஆவை ஓதிக் கொள்ளலாம்.

بِسْمِ اللهِ اللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا وَاسِعًا وَشِفَاءً مِّنْ كُلِّ دَاءٍ

பிஸ்மில்லாஹி அல்லாஹு ம்ம இன்னீ அஸ்அலுக இல்மன் நா:பிஅன், வரிஸ்கன் வாசிஅன், வஷி:பாஅன் மின் குல்லி தாஇன் (நூல் : முஸ்தத்ரக் ஹாகிம் : 1739)

• இத்துடன் தவா:ப் முடிவடைந்து விட்டது இனி பின் வருமாறு சயீ செய்யவேண்டும்.

# ஸபா மர்வாவிற்கு மத்தியில் ஸயீ செய்தல்

பிறகு ஸயீ செய்வதற்காக ஸ∴பா (1) (2) செல்லவேண்டும்.







ஸ∴பாவை நெருங்கிவிட்டால் பின்வரும் வசனத்தை ஓதவேண்டும்.

إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِن شَعَآئِرِ اللَّهِ

இன்னஸ்ஸ∴பா வல்மர்வத மின் ஷஆயிரில்லாஹ் (2:158) என்று கூறவேண்டும்.

பிறகு ஸ∴பாவில் ஏறி நின்றுகொண்டு க∴பாவை முன்னோக்கி (3) பின்வருமாறு கூறவேண்டும்.




لاالَهَ إِلَّا اللَّهُ والله اكبر, لاالَهَ إِلَّا اللَّهُ
وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ, لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ
يُحْيِي وَيُمِيتُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ
لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ أَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ
عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ

லா இலாஹஇில்லல்லாஹு வல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹு

வஹ்தஹூ லாஷரிக லஹூ லஹூ ல் முல்கு வலஹூ ல் ஹம்து யுஹ்யீ வயுமீது வகுவ அலா குல்லி ஷைஇன் கதீர். லா இலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூ அன்ஜஸ வஃதஹூ ,வநஸர அப்தஹூ , வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹூ என மூன்று முறை கூறி விரும்பிய துஆவை கேட்கவேண்டும்.

மேலும் கையை உயர்த்தி அல்லாஹ்வை புகழ்ந்து விரும்பிய துஆக்களை கேட்டுக்கொள்ளலாம்

- பிறகு ஸஃபாவிலிருந்து இறங்கி மர்வாவிற்குச் செல்ல வேண்டும், அப்பொழுது விரும்பிய துஆக்களையோ திக்ருகளையோ அல்லது குர்ஆன் வசனங்களையோ (1)(2) ஓதிக் கொள்ளலாம். மேலும் விரும்பினால் கீழ்வருபவற்றை ஓதிக்கொள்ளலாம்.









அல்லாஹூ ம் ம(ஂ)க்ஃபிர் வர்ஹம் வஅன்தல் அஅஸ்ஸூ ல் அக்ரம் (சுனன் அல்பைஹகீ அல்குப்ரா:9134)

اللهم اغفر وارحم وأنت الأعز الأكرم

- ஸபாஃவிற்கும் மர்வாவிற்கு செல்லும் பகுதியில் பச்சை விளக்கு உள்ள எல்லையிலிருந்து அடுத்த

பச்சை விளக்கு வரும் வரை ஆண்கள் தொங்கோட்டம் ஓடவேண்டும (1) (2) (3)







பச்சை விளக்கு அல்லாத இடங்களில் மெதுவாக நடக்க வேண்டும் அப்பொழுது விரும்பிய துஆக்களை ஓதிக்கொள்ளலாம்.

பிறகு மர்வாவில் நின்று கொண்டு ஸஃபாவில் செய்தவாறு கிப்லாவை முன்னோக்கி கையை உயர்த்தி மேற்கூறிய லா இலாஹா... என்பதை ஓதிவிட்டு விரும்பியவாறு துஆக்கேட்கலாம் (4)





- இப்பொழுது ஒரு சயீ முடிவடைந்து விட்டது பிறகு ஸஃபாவிற்கு நடந்து செல்ல வேண்டும், பச்சை விளக்கு உள்ள எல்லையிலிருந்து அடுத்த பச்சை விளக்கு வரும் வரை ஆண்கள் தொங்கோட்டம் ஓடவேண்டும். அப்பொழுது விரும்பிய துஆக்களையோ திக்ருகளையோ அல்லது குர்ஆன் வசனங்களையோ ஓதிக் கொள்ளலாம். இத்துடன் இரண்டாவது சுற்று முடிவடைந்து விட்டது (மேலே உள்ள படம் 3, 4, ஐ பார்க்கவும்)



லாஇலாஹா இல்லல்லாஹ்வின் பொருள் :
வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர யாருமில்லை

இவ்வாறே ஏழு சுற்றுக்களை செய்யவேண்டும் இன்னும் மேலே சொன்னது போலவே ஒவ்வொரு சுற்றிலும் செய்து கொள்ளவேண்டும். கடைசி சுற்று மர்வாவில் முடிவடையும் (1)




## குறிப்புகள் :

- ஸஃபா மர்வாவிற்கு செல்லும் பொழுது இரண்டு பச்சை விளக்கு உள்ள இடத்தில் விரைந்து ஓடுவது சுன்னத்தாகும் அதற்கு சாத்தியமில்லையெனில் குற்றமில்லை.

- சயீ செய்வதற்கு ஒழு அவசியமில்லை ஒழுவுடன் இருப்பது சிறந்ததாகும்.

- சயீ செய்யும்பொழுது குறிப்பிட்ட துஆக்களோ திக்ருகளோ ஓதத்தேவையில்லை என்றாலும் விரும்பிய துஆக்களையோ திக்ருகளையோ அல்லது குர்ஆன் வசனங்களையோ ஓதிக் கொள்ளலாம்.

- மேலாடையை சயீ செய்யும்பொழுது மாற்றிப்போட வேண்டியதில்லை மாற்றமாக வழமைபோல அணிந்து கொள்ளவேண்டும்.

# மொட்டையடித்தல் அல்லது முடி வெட்டுதல்

- ஏழு முறை சயீ செய்து முடித்தவுடன் சயீ முடிவடைந்து விட்டது எனவே மொட்டை (1) அடித்துக் கொள்ளவேண்டும். அல்லது முடியை தலையின் எல்லா பாகங்களிலிருந்தும் குறைத்துக் (2) கொள்ள வேண்டும். மொட்டையடிப்பது சிறந்தாகும்.

- வலது புறத்திலிருந்து ஆரம்பிப்பது சுன்னதாகும்.










- பெண்கள் தங்களது சடை முடிகளிலிருந்து விரல் நுனி அளவிற்கு வெட்டிக் கொள்ளவேண்டும் (3)

இத்துடன் உம்ராவின் செயல்கள் முடிந்து விட்டது இஹ்ராமில் தடை செய்யப்பட்ட அனைத்தும் ஆகுமாகிவிடும். அல்ஹம்துலில்லாஹ்